**கவனிக்க.-** *28.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1857 - 2014 අප්‍රේල් මස 04 වැනි සිකුරාදා - 2014.04.04**

*1857 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 214 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 218 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, வைகாசி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, பங்குனி 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பூஜாபிட்டிய | கண்டி மாவட்டத்தின் பல்லே கம்பஹா வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாரிஸ்பற்று விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

4-164

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, வைகாசி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, பங்குனி 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | ரம்புக்கே எல பிரதேசத்தின் ஹாரிஸ்பற்று பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | உடுநுவர | பெத்தியாகொட பிரதேசத்தின் உடுநுவர-யட்டிநுவர பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

4-163

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2014**

நிலஅளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I – ஆள் கூற்றுப்பத்திரம் தயாரித்தல்
பகுதி II – பட வேலை

2. பகுதி I - பரீட்சை 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19 ஆந் திகதியும், பகுதி II - பரீட்சை 2014 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 மற்றும் 19 ஆந் திகதிகளிலும் நடைபெறும். பகுதி I பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் பகுதி II பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார்செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து சரியான கிடைப்படம் ஒன்றை ஆள் கூறுகளையும், புறக்டாக்ரரையும் (protractor) பாவித்துக் கீறி சரியாகப் பரப்பைக் கணிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் (N. C. E.) அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்தி (Credit Pass) உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத படவரைஞர் பாடநெறியுடன் தொடர்புடைய பாடநெறியை அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது வேறு பகுதி அரச நிறுவனங்களில் (Semi Government Institution) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

5. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையுடன் அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவையில் பணமாகச் செலுத்தி, பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபால் மூலம் ''சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். காசுக் கட்டளைகள் "சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் (பயிற்சி)" என்னும் பெயரில் எடுக்கப்பட்டு தியத்தலாவை தபாலகத்தில் மாற்றக்கூடியதாக இருக்க வேண்டும். கட்டணத்தை, பணம் மூலம் செலுத்திய மூலப் பற்றுச்சீட்டை அல்லது காசுக் கட்டளையின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கவும். (தயவுசெய்து அவற்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டாம்.) பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2014" என எழுதப்பட வேண்டும்.

6. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

7. 2014 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 16 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுகளைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

9. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு ;

(ii) பந்தி 9 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

10. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

என். குணவர்தன,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2014.03.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2014

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி
(தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் (தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ஆ) பால் :----.
(இ) பதவி :----.
(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :----.
(உ) நிரந்தர முகவரி (தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ஊ) பிறந்த திகதி :----.
(எ) கல்வித் தகைமைகள் (உறுதிப்படுத்திய உண்மைப் பிரதிகள் (Certified true copies) இணைக்கப்பட வேண்டும்) :----.
(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.
(ஐ) செலுத்திய கட்டணம் : ரூபா :----.
(ஒ) காசுக் கட்டளை இலக்கம்/பற்றுச்சீட்டு இலக்கம் :----.
வழங்கிய அலுவலகம் :----.
திகதி :----.

(தியத்தலாவை அளவையியல், படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப்பிரதியை இணைக்கவும்.)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும் மற்றும் உண்மை யானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

4-127

---

## தொழில்நுட்பவியல் நிறுவனம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி – 2014/2015

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இக்கற்கைநெறியானது, தொழில்நுட்பவியல் நிறுவனத்திற் கான புதிய நிலையங்களில் நடத்தப்படும் வரை, மொறட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டிட நிலையங்களிலேயே நடாத்தப்படும்.

1. **பொது**.- தொழில்நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறி யானது இரண்டு வருட முழு நேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சி யையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றன :-

(அ) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை I) :

(i) கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும்.

(ஆ) ஏனைய தெரிவுகள் (வகை II) :

(i) இரசாயன எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) குடிசார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) மின்சார எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iv) இலத்திரன் தொலைத்தொடர்பு எந்திரவியற் தொழில்நுட்ப வியல் ;
(v) பொறிமுறை எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vi) பல்பகுதிய தொழில்நுட்பவியல் ;
(vii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பவியல்.

2. **தகைமைகள்** :

2.1 வயது மற்றும் பிற தகைமைகள்:

(அ) விண்ணப்பதாரிகள், 31.12.2013 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 31.12.2013 இல் 20 வயதிற்கு குறைந்த விண்ணப்ப தாரர்களுக்கு கப்பற்துறைக் கல்வித் தொழில்நுட்ப வியல், கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல், பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கப்பற் துறை கல்வியும் தொழில்நுட்ப வியலும் (வகை I) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பனவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

(இ) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 கல்வித் தகைமை.- விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிற்கு (03) குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2011 அல்லது 2012 அல்லது 2013 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை** :

3.1 கற்கைக்கான அனுமதி.- அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும். தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர். அதாவது இசற் மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவுசெய்யப்படுபவர் களில் 40% தினர் திறமை அடிப்படையிலும் 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவுசெய்யப் படுவர்.

3.2 கற்கைத் துறை.- கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்கையில், தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற்கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

4.1 விண்ணப்பப்படிவம் :

(i) மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல்களை அரசாங்க வர்த்தமானியில் அல்லது பின்வரும் இணையதள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.mrt.ac.lk/itum

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2014/2015" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக் கழகம், கட்டுப்பெத்தை, மொறட்டுவை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட் டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்தை, மொறட்டுவை என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) இரண்டு 9" x 4" முத்திரை ஒட்டிய கடித உறையில், (பெறுமதி 40 ரூபா) உங்களது சுய விலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப் பப்படிவத்தில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளைப் பார்க்க.)

4.2 கற்கை நெறிக்கான முன்னுரிமை :

(i) இரண்டு வகை கற்கை நெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கப்பற்துறைசார் கற்கை நெறி (வகை I) அல்லது ஏனைய கற்கை நெறி (வகை II) அல்லது இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டிற்கும் விண்ணப்பிக்கு மிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை I இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கப்பற்துறைசார் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) வகை II இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண் டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை 1, 2, 3, 4, 5, 6, 7 என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்**.- ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு ரூ. 300 (முந்நூறு ரூபா) உம், இரண்டு வகைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 500 (ஐநூறு ரூபா) உம் ஆகும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் "தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி (கட்டுபெத்தை கிளை), கணக்கு இல. 0000308280" க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதி.- விண்ணப்ப முடிவுத் திகதியானது 2014, மே மாதம் 02 ஆந் திகதியாகும் (02.05.2014).

6. **தகுதிகாண் பரீட்சை**.- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத் திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரி களே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்**.- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதி களை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் மதிப்பீடு (Z - Score) ;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ்

பத்திரம்/சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

8. **முக்கிய கவனத்திற்கு**.- (i) ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில்நுட்ப வியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டதும் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்த ஒரு கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில்நுட்ப வியல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க தகுதியற்ற வர்கள் ஆவர்.

பணிப்பாளர்.

தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
2014.04.04.

SPECIMEN APPLICATION FORM

**Application for Admission to the National Diploma in Technology Course – Academic Year 2014/2015**

INSTITUTE OF TECHNOLOGY - UNIVERSITY OF MORATUWA

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | *For office use only* | | | | |
| | Application No. | | | | |
| | District | | | | |

Application For (Please tick ( ✓)) -

(a) Maritime Fields - (SET 1) ☐

(b) Other Fields - (SET 2) ☐

[Applicants may apply for single set (Set 1 or Set 2) or both sets (Set 1 and Set 2)]

01. Personal Details (Please Use **BLOCK CAPITALS**)

Name in Full :

(Leave one blank cage between names)

Name with Initials :

(Leave one blank cage between names)

| Title ► | Mr./Ms. | | Sex ► | Male/Female | | |
|---|---|---|---|---|---|---|
| Age As at 31st Dec. 2013 | (Years) | (Months) | Date of Birth | Date | Month | Year |
| National ID Number | | | | | | |

02. Contact Details :
Address (Residence):

(Leave one blank cage between different segments of the address)

| | |
|---|---|
| Telephone | |
| Mobile | |
| E-mail (if available) | |

03. Results of G. C. E. (Advanced Level) Examination :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st attempt* | *2nd attempt* | *3rd attempt* |
| Year | | | |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index Number | | | |
| Z-Score | . | . | . |
| Results of the year to be considered for Selection (indicate whether 2011 or 2012 or 2013) | | | |

04. Medium

| | |
|---|---|
| Medium in which you wish to sit the aptitude Test | Sinhala/Tamil/English (Delete whatever is inapplicable) |

05. School(s) attended from Year 11 to 13 :

| *Year* | | *Name & Address of School* | *District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | *From* | | | *To* | | |
| | | | | *Year* | *M* | *D* | *Year* | *M* | *D* |
| 11 | | | | | | | | | |
| 12 | | | | | | | | | |
| 13 | 1st Attempt | | | | | | | | |
| | 2nd Attempt | | | | | | | | |
| | 3rd Attempt | | | | | | | | |

06. Certification of Results and Schools attended :

It is compulsory to certify the Results under No. 03 and Details under No. 04 in the application by the School Principal for the School Candidates and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the cage No.03 and No. 04 are true and accurate according to the Original Certificates.

Name of the Principal/Justice of Peace : (Rev./Dr./Mr./Mrs.) ................................................................................

Official Seal

......................., .....................
Signature Date

07. Field Preference :

*Set 1* - Insert order of preference as 1 for First preference and 2 for Second preference. This should be completed only by the candidates who have applied for Maritime Studies.

*Set 2* - Insert order of preference as 1, 2, 3, 4, 5, 6, 7. '1' for the "Most Preferred", '2' for the next and so on,'7' for the last preferred.

| *Set 1* | | *Set 2* | |
|---|---|---|---|
| *Maritime Fields* | *Order* | *Other Fields* | *Order* |
| Marine Engineering Technology | | Chemical Engineering Technology | |
| Nautical Studies and Technology | | Civil Engineering Technology | |
| | | Electrical Engineering Technology | |
| | | Electronic & Telecommunication Engineering Technology | |
| State Priority, if applied for both sets (Please tick (✓)) | | Mechanical Engineering Technology | |
| SET 1 | | Polymer Technology | |
| SET 2 | | Textile & Clothing Technology | |

| | | |
|---|---|---|
| Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any other Higher Educational Institution under the Ministry of Education ? (Delete whatever is inapplicable) | YES | NO |

Applicant's Declaration :

(1) I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Education.

(2) I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if the particulars given by me in this Application are found to be false or inaccurate prior to my admission, I will be discontinued from the course.

(3) In the event of my being selected for admission after the test, I shall abide by Statutes, By-Laws, Regulations and the Rules of the Institute of Technology, University of Moratuwa, in so far as they are applicable to me.

(4) I have pasted the Cash deposit/ Cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Katubedde Branch".

(5) I also enclose a self-addressed stamped envelope (Rs. 40 worth) in size 9" x 4".

(6) I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

----,
Signature of Applicant.

Date :-----.

| |
|---|
| Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here. |



## நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலமான பரீட்சையின் பெறுபேறுக்கு அமைய, திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு நியமனம் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றுவோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4. **தகைமைகளும் அனுபவங்களும்.**- (அ) கல்வித் தகைமைகள் :

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழில்சார் தகைமைகள்.- 4அ இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன் சிவில் பொறியியல் துறையில் பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றினை பரீட்சார்த்திகள் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா ; அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா ; அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ; அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பவியல் டிப்ளோமா ; அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(vi) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென இலங்கை தொழில் நுட்பவியல் சேவைகள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(இ) *உடல்சார் தகைமைகள்*.- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவாறு நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(ஈ) *வேறு தகைமைகள்*.- (i) கணினித் தரவுப் பதிவு தொடர்பான அறிவுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து என்வீகியூ 3 மட்டத்திலான கணினிப் பாடநெறியொன்றை கற்றிருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 06/2006 (iv) இன்கீழ் MN3-2006A ரூபா 15,005 - 180 x 4 - 240 x 6 - 320 x 11 - 360 x 20 - ரூபா 27,885.

தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் என்பதுடன், நியமனம் பெற்று 5 வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் 2007.05.28 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கமைய மற்றைய அரச கரும மொழி தொடர்பாக உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (1) இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய உரித்தைக் கொண்டது ;

(2) தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுவார்கள் ;

(3) தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள் என்பதுடன், தற்போது அரசாங்க சேவை ஊழியராக இருப்பின், ஒரு வருட பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படுவார்கள் ;

(4) தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கைகள், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், திணைக்கள அறிவுரைகளுக்கு உட்பட்டு செயற்படுவதற்கு கட்டுப்படுவார்கள்.

7. (i) **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை**.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும். முதலில் எழுத்து மூலமான பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்திகளிலிருந்து எழுத்து மூலமான பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்து மூலமான பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்குவரிசையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ள எண்ணிக்கையானோர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். எழுத்து மூலமான பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2014, யூலை மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப் படும் ;

(ii) *பரீட்சை முறை*.- (அ) இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது ;

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடை அளித்தல் வேண்டும்.

(இ) பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப் படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சை பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் உட்படுதல் வேண்டும்.

(iii) *பரீட்சைக்குரிய பாடங்கள்*.- பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

(1) நுண்ணறிவுப் பரீட்சை ;
(2) தொழில்நுட்பவியல் வினாத்தாள்.

(iv) *பெறுபேறுகளை வெளியிடுதல்*.- எழுத்து மூலமான பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% ஆன புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கு அமைய தெரிவுசெய்யப்பட்டு வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு எண்ணிக்கையான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை உள்ளடக்கியதாக பெயர்கள் அகர வரிசையில் தயார் செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கான பெயர்ப்பட்டியல் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்படும்.

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைத்த பின்னர் எழுத்து மூலமான பரீட்சையின் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் மொத்தக் கூட்டுத்தொகையை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு அட்டவணை நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்படும்.

8. **பாடவிதானம்**.- (1) *நுண்ணறிவுப் பரீட்சை*.- நேரம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

பதப் பிரயோகம், கணிதம் மற்றும் படங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்விகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான விவரணம், சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல் மற்றும்

நேர முகாமைத்துவத்தை மதிப்பிடுவதற்கான கேள்விகளைக் கொண்டது.

(2) தொழில்நுட்பவியல் வினாத்தாள்.- நேரம் : 3 மணித்தியாலங்கள் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

பின்வரும் துறைகள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவு பரிசீலிக்கப்படும் :-

(1) கனிய அளவை மதிப்பீடு ;
(2) கனிய அளவைப் பத்திரங்களைத் (பிஓகியூ) தயார் செய்தல் ;
(3) மதிப்பீடுகளைத் தயார் செய்தல் ;
(4) கட்டடங்களை நிர்மாணிக்கும் வேலைகளின் கனிய அளவைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் புள்ளிகளின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகைக்கு அமைய கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்குரிய முன்னுரிமை அட்டவணை தயார் செய்யப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட வினாத்தாளுக்கு பதில் அளிப்பதற்குத் தேவையான கேத்திர கணித உபகரணங்கள் மற்றும் ஏனைய அம்சங்களை பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

9. **பொய்யான மற்றும் தவறான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு அமைய யாராயினுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லை என்பது தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி வாய்ப்பை இழக்கச்செய்ய முடியும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற தகவல் யாதாயினுமொரு சந்தர்ப்பத்தில் உண்மைக்கு முரணானதென்பது தெரியவரும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடன், அதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படக் கூடாது.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இந்தத் தொகையை பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு எந்தவொரு பிரதேச செயலகத்திலும்/மாவட்ட செயலகத்திலும் அல்லது தபால் அலுவலகத்திலும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப் படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திலுள்ள உரிய கூண்டில் அகற்ற முடியாதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எதிர்கால உபயோகத்திற்காக நீங்கள் வைத்திருத்தல் வேண்டும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் போன்றனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) விண்ணப்பப் படிவத்தை ஏ4 (21 x 29 செ. மீ.) (சாதாரண ஹாவ்சீட்) அளவான கடதாசியைப் பயன்படுத்தி,

(i) இலக்கம் 1 தொடக்கம் 3 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்,

(ii) இலக்கம் 4 தொடக்கம் உள்ள பந்திகளை அடுத்த பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்துகொள்ளல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள், பூர்த்திசெய்யப்படாத தகவல்களை உள்ளடக்கியுள்ள விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். மேற்படி விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம், பரீட்சைக் கான அறிவித்தலிலுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவா னதாக உள்ளதா என்பது பற்றி பரீட்சார்த்தி கவனமாக இருத்தல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்திசெய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தை தயார் செய்துகொள்ளும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் 2014, மே மாதம் 2 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 12 எனும் தலைப்பின்கீழ் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பது கட்டாயத் தேவைப்பாடாகும்.

(ஈ) பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக் கப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், நீங்கள் கொழும்புக்கு வெளியே வசிக்கும் பரீட்சார்த்தியாயின், உங்களின் மேற்படி விபரங்களுடன் பெக்ஸ் மூலம் அனுமதி அட்டையின் பிரதியை உங்களுக்கு அனுப்புவதற்கான உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிடுகின்ற கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது உகந்தது. அவ்வாறு வினவும்போது அவசியமான சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்காக உங்களிடம்

வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்துக்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றையும் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(உ) பரீட்சார்த்தி பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தையே பரீட்சைத் தினத்தன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்று இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஊ) யாராயினுமொரு பரீட்சார்த்திக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பதை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படக் கூடாது.

12. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தை உறுதிசெய்வதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. இங்கு குறிப்பிடப்படாதுள்ள வேறு யாதாயினுமொரு விடயம் இருப்பின், அதுபற்றி நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் செயலாளர் தீர்மானம் மேற்கொள்வார். சகல பரீட்சார்த்திகளும் இந்த வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டங்கள், விதிகளுக்கு அமைய செயற்படுவதற்கு கட்டுப்படுவார்கள்.

பி. எச். எல். விமலசிறி பெரேரா,
செயலாளர்,
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு,
2014, ஏப்பிறல் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்கு இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014

Open Competitive Examination for the Recruitment to Technical Officer Grade III of Sri Lanka Technical Service of The Ministry of Construction, Engineering Service, Housing & Common Amenities - 2014

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தைக் கூண்டில் குறிப்பிடுக.)

1.
1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடும் வகையில் முதலெழுத்துக்களுடனான பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உதா : PERERA, A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.
2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.4 தபால் நகரம் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3.
3.1 பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூண்டில் குறிப்பிடுக.)

3.2 தேசிய அடையாள அட்டை இல. :
☐☐☐☐☐☐☐☐☐☐

3.3 பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 2014.05.02 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
(i) பரீட்சையின் ஆண்டும், மாதமும் :----.
(ii) பரீட்சை இலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :
(i) பரீட்சையின் ஆண்டும், மாதமும் :----.
(ii) பரீட்சை இலக்கம் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

5. தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | கால எல்லை | சித்தி | சான்றிதழ் இலக்கமும், திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. வேறு தகைமைகள் :

| நிறுவனம் | கற்றுள்ள கணினிப் பாடநெறி |
|---|---|
| | |

7. தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவராயின்,

7.1 திணைக்களத்தின்/நிறுவனத்தின் முகவரி :----.
7.2 தற்போது வகிக்கின்ற பதவி :----.
7.3 சேவைக்காலம் :----.
7.4 நிரந்தர ஓய்வூதிய உரித்துடையவரா அல்லது தற்காலிக அடிப்படையிலா என்பது :----.

8. நீங்கள் எப்பொழுதேனும் யாதாயினுமொரு குற்றச்சாட்டுக்கு நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :

☐ ஆம் ☐ இல்லை

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக :----.

(உரிய கூண்டில் ✓ அடையாளத்தை இடுக.)

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும், திகதியும் :----.
(iii) செலுத்தப்பட்ட தொகை :----.

| பற்றுச்சீட்டை அகற்ற முடியாதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும், நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். இதன் சில பகுதிகளை பூர்த்தி செய்யாமை காரணமாக மற்றும்/அல்லது தவறாக பூர்த்தி செய்வதன் காரணமாக இடம்பெறக்கூடிய இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதன் அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

(ஆ) நான் குறிப்பிட்டுள்ள தகவல்களில் யாதாயினும் உண்மைக்கு மாறானதென உறுதி செய்யப்படும் பட்சத்தில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு நான் உட்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் நான் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப் படுத்தல்.-**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/ செல்வி ...................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ........................................ ஆந் திகதி அவரின் கையொப்பத்தைப் பதிவுசெய்தார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் சான்றுப் படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துகை)
திகதி :----.

12. **விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலுள்ள ஊழியராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ...................................................... இன் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்த அமைச்சில்/திணைக்களத்தில், நிரந்தர/தற்காலிக/அமய அடிப்படையில் ஊழியராக சேவையாற்றி வருகின்றார் என்றும், மேற்படி பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதென்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

சான்றுப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

4-125

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.03.2014 |
| | | வெள்ளி | 11.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2014 |
| | | வியாழன் | 17.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2014 |
| | | வெள்ளி | 25.04.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2014 |
| **மே** | .. | வெள்ளி | 02.05.2014 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.04.2014 |
| | | வெள்ளி | 09.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2014 |
| | | வெள்ளி | 16.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2014 |
| | | வெள்ளி | 23.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2014 |
| | | வெள்ளி | 30.05.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2014 |
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*